2nd November 1962]

திரு. கரு. சீமைச்சாமி : இராமநாதபுரத்தில் ஏராளமான ஏக்கரா தரிசு நிலங்கள் இருப்பதால் அந்தப் பகுதியில் முந்திரி அதிகம் பயிரிடும் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கிழக்கு இராமநாதபுரத்தில், சிலோனில் இருந்து வந்தவர்களுக்கு உதவி செய்வதற்காக ஏற்பாடு செய்யும் முறையில் முந்திரி பயிர் வைக்கும் திட்டத்தை எடுத்துக் கொண்டோம். எங்கெல்லாம் இன்னும் வசதி இருக்கிறதோ அங்கெல்லாம் ஏற்படுத்தப்படும்.

** 1133 கேள்வி.*—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முந்திரி ஏற்றுமதிக் கவுன்சில் திட்டப்படி தென்னாற்காடு மாவட்டத்தில் எவ்வளவு விஸ்தீரணத்தில் புதிதாக முந்திரி பயிரிடப்பட்டது ?

(இ) அந்தப் பகுதியில் முந்திரிக்கு நோய் ஏற்பட்டு காய்க்காமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(உ) அதற்கான காரணமும், தடுப்பு நடவடிக்கையும் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (அ) & (உ) A paper [a] is placed on the Table of the House.

** 1134 கேள்வி.*—**திரு. முனு. ஆதி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வண்டலூரில் முந்திரி பயிரிடுதல் பற்றி ஆராய்ச்சி நடத்த ஒரு ஆராய்ச்சி கேந்திரம் நிறுவப்பட்டுள்ளதா ? விவரமென்ன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ஆம், ஐயா.

இந்த ஆராய்ச்சிக் கேந்திரத்தில் நடத்தப்படும் ஆராய்ச்சிகள் பின்வருமாறு—

மிகச் சிறந்த முறை, காலம், செடிகளை இடைவெளி விட்டு நடும் முறை, முந்திரி பயிர் செய்வதற்கு தகுந்தாற்போல் மண்ணை வளப்படுத்தும் பல்வேறு முறைகள், வண்டலூரில் முந்திரிச் செடிகளின் உரத் தேவைகள், உயர்ந்த ரக விதைகளைத் தயாரித்தல் முதலிய ஆராய்ச்சிகள்.

*1135 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to start a pilot project for cashew cultivation in Ramanathapuram district; and

(*b*) if so, the details thereof?

---

a Printed as Appendix V on page 520—521

[2nd November 1962

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

காடுகள் (உளுந்தூர்பேட்டை)

* *1136 கேள்வி.—கு. கோபால கவுண்டர்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) உளுந்தூர்பேட்டை வட்டாரத்திலிருக்கும் காடுகளை வெட்டிச் செல்ல, கண்ட்ராக்டுக்கு விடப்பட்டதா ?

(இ) அதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்த மொத்த தொகை எவ்வளவு ?

(உ) எவ்வளவு காலம்வரை கண்ட்ராக்டர்கள் மரங்களை வெட்டிச் செல்லும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம், ஐயா.

(இ) 1957-58-லிருந்து 1962-63 வரை கிடைத்த தொகை ரூ. 11,177.

(உ) ஒவ்வொரு வருடமும் எட்டு மாதங்கள்—அதாவது எப்ரல் முதல் தேதியிலிருந்து நவம்பர் 30-ம் தேதி வரை.

Text Books (Standardization)

* 1137 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the progress made so far regarding standardization of text books for the primary school classes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Text books in English for Standards V, VI and VII; Text books in Tamil, Telugu, Malayalam, Urudu and Non-detailed Text-Books in English, Tamil, Telugu, Malayalam and Urudu for Standard VII have been published by the Government so far.

விசாரணைக் கைதி (மரணம்)

* *1138 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தின் விலைவாசி குறைப்பு போராட்டத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைக் கைதியாக மதுரை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த எவரேனும் மரணமடைந்தாரா ?

(இ) அப்படியானல், அவர் இறந்ததின் காரணமென்ன ?